பதிவு எண் M. 4729

தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மகாத்மா காந்தியடிகளின் வாரப் பத்திரிகை

52 | சென்னை—ஞாயிறு, ஏப்ரல் 6, 1947. [விலை. அணு. 2

பத்திரிகைகளுக்கு ஒரு புத்திமதி

மகாத்மா காந்தியடிகளை டில்லிக்கு வந்து தம்மை சந்திக்கும்படியாக வைஸிராய் காந்தி யடிகளுக்கு அழைப்பு அனுப்பி இருப்பதாகவும் காந்தி யடிகள் அதற்கு பதில் அனுப்பி இருப்பதாகவும் ஒரு செய்தி மார்ச்சுமீ 26-ந் தேதி காலையில் பாட்னுவில் வெளியாகும் ஒரு தினசரிப் பத்திரிகைகளில் பிரசுரமாகி இருந்தது. அதைக் குறித்து சில பத்திரிகை கிருபர்கள் காந்தி யடிகளிடம் கேட்டபோது அவர் கூறியதாவது :—

“இந்தச் செய்தி அரைகுறையான உண்மைகள் நிறைந்ததாக இருக்கிறது. அரைகுறையாக உள்ள உண்மைகளே முழுதாக உள்ள உண்மைகளை விட அதிக அபாயகரமானவை என்றே நான் எப்பொழுதும் கூறி வருகிறேன். அதனல் அரைகுறையான உண்மைகளை ஒரு பொய் என்று கூருமல் ஒரு ‘பொய்யும் அரைப் பொய்யும் சேர்ந்தவை’ என்று கூறுகின்றேன்.

இந்தச் செய்தியை கட்டி விட்டவர் யாரா யிருந்தபோதிலும் அவர் இந்தியாவின் சுதந்திர லக்ஷியத்துக்கோ அல்லது யோக்கியமான பத்திரிகைத் தொழிலுக்கோ எந்த விதமான சேவையும் செய்தவராக மாட்டார். இந்தியாவில் உள்ள பத்திரிகை கிருபர்கள் மேனுட்டில் நடக்கும் பத்திரிகைத் தொழிலில் காணப்படும் தவருன அம்சங்களை கிரகித்துக்கொள்ளக் கூடாது என்று விரும்புகிறேன். மேனுட்டு பத்திரிகைத் தொழிலில் இருந்து எதையேனும் கிரகித்துக் கொள்ள வேண்டுமென்று விரும்பினல், அதில் உள்ள நல்ல சிறந்த அம்சங்களையே கிரகித்துக் கொள்ள வேண்டும். அத்தகைய சிறந்த அம்சங்கள் மேனுட்டு பத்திரிகைத் தொழிலில் பல உண்டு என்பதற்கு நான் சந்தோஷத்துடன் சான்று பகருவேன்.

நான் ஜீவனத்திற்காக பத்திரிகைத் தொழிலில் ஈடுபடாவிட்டாலும் நீண்ட நாளாக பத்திரிகைத் தொழிலில் சம்பந்தப்பட்டவனுகவே இருந்து வருகிறேன். நாட்டின் நான்காவது பலமாக கூறப்படும் பத்திரிகைத் தொழில் பணம் சம்பாதிக்கும் சாதனமாக மாறி தன்னை இழிவு படுத்திக் கொள்ளக் கூடாது என்று நான் எச்சரிக்கை செய்ய வேண்டியவனுக இருக்கிறேன். அதிலும் இப்பொழுது தேசம் இருந்துவரும் நிலைமையில் இந்த எச்சரிக்கை மிகவும் அவசியமாகும்.



மகாத்மா காந்தியடிகள்
ஒரு குருடரான பிச்சைக்காரரிடம் முஸ்லிம் சகாய நிதிக்காகப் பணம் பெறுகிருர்.

சுதந்திரக் கனியை இழந்துவிட வேண்டாம்

மகாத்மா காந்தியடிகள் மார்ச்சு மாதம் 27-ந் தேதி கயா ஜில்லாவில் ஒக்கிரி என்னும் கிராமத்தில் நடத்திய மாலைப் பிரார்த்தனைக் கூட்டத்தில் கூறியதாவது:—

“இப்பொழுது சுதந்திரக்கனி நம்முடைய கைக்கு எட்டி விடும் போல் இருக்கிறது. இந்தச் சமயத்தில் நாம் பைத்தியக்காரத்தனமாக நடந்து அதை கைக்கு எட்டாமல் நழுவிப் போய் விடும்படியாக செய்து விடக் கூடாது. சில மாதங்களுக்கு முன் இங்கு நடந்த அக்கிரமங்களெல்லாம் பைத்தியக்கார வெறியினல் ஏற்பட்டவைகளே ஆகும். இப்பொழுது தேசத்தில் காணப்படும் அமைதி உண்மையான அமைதியன்று. வெறும் தோற்றமே ஆகும்.

இப்பொழுது புதிதாக வந்திருக்கும் வைஸிராய் மௌண்டுபாட்டன் பிரபு தாம் வேலையை ஒப்புக் கொள்ளும்பொழுது இந்தியாவில் இதுவரை நடந்து வந்த

பிரிட்டிஷ் ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைக்கும் காரியத்தை செய்யும் கடைசி வைசிராயாகவே வந்திருப்பதாக கூறி இருப்பதை நீங்கள் அறிவீர்கள். அவர் இந்த விஷயத்தை வேண்டுமென்று தெளிவாகவும் எவ்வித சந்தேகத்துக்கும் இடமில்லாமலும் எவ்வித நிபந்தனைகளும் இல்லாமலும் கூறி இருக்கிறார் என்பதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். பிரிட்டிஷார் எதைச் சொன்னாலும் அதை நம்பாமல் இருப்பது நம்முடைய நாட்டில் ஒரு வழக்கமாக ஆகி இருக்கிறது என்பதையும் அப்படி நம்பாமல் இருப்பதற்கு காரணங்கள் உண்டு என்பதையும் நான் அறிவேன். ஆயினும் பிரிட்டிஷாருடைய கூற்றுக்களைப் பற்றிய நம்முடைய பழைய அனுபவம் எப்படி இருந்தபோதிலும் அவர்கள் கூறும் ஒவ்வொன்றையும் அதைப் பார்த்த உடன் நியாயமானதாகத் தோன்றினால் அந்த அளவுக்கு அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் யோசனை கூற விரும்புகிறேன்.

ஏமாற்றுகிறவர்தான் எப்பொழுதும் நஷ்டம் அடைபவர் என்பதும் ஏமாற்றப்படுகிறவர் உண்மையாகவும் தைரியமாகவும் நடந்துகொண்டால் ஒரு பொழுதும் நஷ்டமடைவதில்லை என்பதும் என்னுடைய அனுபவமாகும். அது எப்படி இருந்தபோதிலும் நாம் கஷ்டப்பட்டு சம்பாதித்துள்ள சுதந்திரக்கனியை நம்முடைய இரும்பு பிடிப்பைப் போன்ற கையில் இறுக பிடித்துக்கொள்வதற்கு முன்னால் நம்முடைய முட்டாள் தனத்தினாலோ அல்லது அதைவிட மோசமான பைத்தியக்காரத் தனத்தினாலோ கைநழுவ விட்டுவிடுவோமோ என்று நான் பெரிதும் அஞ்சுகிறேன்.

பீஹாரில் நடந்த விஷயங்களையும் பஞ்சாபில் நடக்கும் விஷயங்களையும் பார்த்தால் வைஸ்ராய் மிகுந்த பயபக்தியுடன் கூறிய மொழிகளை தாமே மீறிவிடும்படி நாம் செய்துவிடுவோமோ என்று நான் எண்ணுகிறேன். அத்தகைய நிலைமை ஏற்படாதவாறு ஆண்டவன் நம்மை பாதுகாப்பாராக. ஆனால் அத்தகைய நிலைமை ஏற்பட்டால் என்னுடைய குரல் காட்டில் உண்டாகும் குரலைப்போல் அலட்சியம் செய்யப்பட்டாலும் கூட வைஸ்ராய் தாம் கூறிய கூற்றை நிறைவேற்றி பிரிட்டிஷ் ஆட்சியை பரிபூரணமாக அகற்றி இந்திய ஆட்சியை ஏற்படுத்த வேண்டுமென்று நான்கேட்டுக் கொள்கிறேன்.

போலிஸ் வேலை நிறுத்தம்

காந்தியடிகள் பாட்னாவிலிருந்து 18 மைல் தூரத்திலுள்ள ஒக்கிரி என்னும் கிராமத்தில் செய்த பிரார்த்தனைப் பிரசங்கத்தில் கூறியதாவது:—

"போலீசாரும் தோட்டிகளும் சமூக வாழ்வில் மிகுந்த முக்கியத்துவம் உடையவர்கள் ஆவார்கள். சமூகத்திற்கு சேவை செய்வதே அவர்களுடைய முதற்கடமை. அதனால் அவர்கள் வேலை நிறுத்தம் செய்யமுடியாது. போலீஸார் சேவை செய்யும் மனப்பான்மையை மறந்து சமூக முழுவதையும் சின்னாபின்னப் படுத்த விரும்பினால் நான் 125 வருடம் உயிருடன் வாழ்வதற்கு விரும்ப மாட்டேன். போக்கிரிகளுடைய அரசாட்சியில் வாழ்வதற்கு நான் மறுத்து விடுவேன்.

போலீஸாருக்கு குறைகளிருந்தால் அவர்கள் மந்திரிகளிடம் விண்ணப்பித்துக் கொள்ளலாம். குறைகளை நீக்கிக் கொள்வதற்காக சட்ட பூர்வமான கிளர்ச்சியும் செய்யலாம். ஆனால் ஜனங்களெல்லோரும் நல்ல மனிதர்களாகி போலீஸ் வேலையை தாங்களே செய்வார்களேயானால் போலீஸ் இருக்கவேண்டிய அவசியமே இல்லாமல் போய்விடும். அந்த மாதிரி ஜனங்கள் நடந்துகொள்ளாததனால் தான் போலீஸார் இருந்து கொண்டிருக்கின்றார்கள். நீங்கள் இவ்விதமாக நடந்துகொண்டால் போலீஸாருக்கு அறிவு உதயமாகி அவர்கள் சேவைசெய்ய தயாராகி விடுவார்கள்.

நான் தென்னாப்பிரிக்காவிலிருந்து முதன் முதலாக இந்தியாவுக்கு வந்தபொழுதுதான் பிரிட்டிஷாரிடம் வேலைபார்க்கும் போலீஸார் இத்தகையவர் என்பதை நேரில் தெரிந்துகொண்டேன். இந்த மாதிரியான போலீஸார் நம்முடைய நாட்டில் இருக்கக் கூடாதென்றே எண்ணுகிறோம். நீங்கள் உண்மையான போலீஸ்காரர்களாக ஆகிவிடுங்கள். போலீஸ்காரர்கள் சட்ட பூர்வமாகவும் சாந்தமாகவும் நடக்காவிட்டால் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது மந்திரிகளின் கடமையாகும். ஆனால் எவ்வளவு கடுமையாய் இருந்தாலும் எள்ளளவும் நியாயத்தை விட்டு பிறழக்கூடாது. போலீஸாருடைய கோரிக்கைகளை விசாரித்து முடிவு செய்வதற்காக ஒருவரை நியமிக்க சர்க்கார் தயாராக இருப்பதாகவும் விசாரிப்பவர் போலீஸார் ஒவ்வொருவருக்கும் ஒரு மோட்டர்கார் கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பளித்தால்கூட அவ்விதமே கொடுப்பதாகவும், மந்திரிகள் போலீஸாரிடம் சொல்ல வேண்டும். ஆனால் மந்திரிகள் ஒரு நாளும் பயமுறுத்தலைக் கண்டு அஞ்சி பணிந்து விடக்கூடாது.

"பாட்னாவில் போலீஸாரை அடக்குவதற்காக பிரிட்டிஷ்துருப்புகளை அழைப்பது என்பதை என்னால் ஒரு பொழுதும் சகிக்க முடியாது என்பதை மந்திரிகள் அறியவேண்டும். பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் உள்ள பட்டாளங்கள் தான் இந்தியாவில் நடைபெறும் பிரிட்டிஷ் ராஜ்ஜியத்தின் முதுகெலும்பாகும். ஆதலால் மந்திரிகள் பிரிட்டிஷ் பட்டாளங்களை தங்களுக்கு உதவிசெய்யயும்படி அழைத்தால் அவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியை இந்தியாவை விட்டு வெளியேற வேண்டாம் என்று சொல்வது போலவே ஆகும். இதை மந்திரிகள் உணர்ந்து கொள்ள வேண்டும். பிரிட்டிஷார் வெளியேறியபின் மந்திரிகள் யாரைக் கூப்பிடப் போகிறார்கள்?"

இரண்டும் ஒரே மாதிரிதான்

மகாத்மா காந்தியடிகள் கயா ஜில்லாவிலுள்ள ஜகனபாத் என்னும் ஊரில் உள்ள முஸ்லிம்களின் அகதி முகாமை பார்வையிட்டபொழுது அங்குள்ள முஸ்லிம் அகதிகள் தங்களுடைய குறைகளைக் குறித்து ஒரு விண்ணப்பம் எழுதி காந்தியடிகளிடம் சமர்ப்பித்தார்கள். காந்தியடிகள் அதுபற்றி கூறியதாவது:—

"நான் நவகாளியில் நடந்த அக்கிரமங்களை கூறுவதால் ஹிந்துக்களுடைய துவேஷ உணர்ச்சிகள் குறைவதற்குப் பதிலாக கூடவே செய்கின்றன என்று இந்த விண்ணப்பத்தில் கூறப்பட்டிருக்கிறது. நான் கூடிய மட்டும் நவகாளி அக்கரமங்களைப் பற்றி என்னுடையபிரசங்கங்களில் பேசாமலேதான் இருந்துவருகிறேன். பேச வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும் காலத்திலுங்கூட நான் வெகு ஜாக்கிரதை யாகவே பேசி வருகிறேன். நவகாளியிலுள்ள முஸ்லிம்கள் செய்த அட்டூழியங்களைப் பற்றி பேசாமல் பீஹாரிலுள்ள ஹிந்துக்கள் செய்த அட்டூழியங்களைப் பற்றி மட்டுமே பேச வேண்டுமென்று முஸ்லிம்கள் விரும்புகிறார்களா? அவர்கள் கூறுகிறபடி செய்வேனேயானால் நான் கோழையே யாவேன். நவகாளியிலுள்ள முஸ்லிம்கள் செய்த அட்டூழியங்களும் பீஹாரிலுள்ள ஹிந்துக்கள் செய்த அட்டூழியங்களும் ஒரே மாதிரி கேவலமானவைகளாகும். அவைகள் இரண்டையும் நான் ஒரே மாதிரியாகவே கண்டிக்கின்றேன்.

இப்பொழுது பஞ்சாபில் மிகவும் மோசமான காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நான் முதலில் பத்திரிகைகளில் வந்த செய்திகளை நம்பவில்லை. ஆனால் பிறகு விசாரித்தபொழுது பத்திரிகை

ஏழைகளின் இரத்தத்தில் முளைக்கும் தாமரைதான் லட்சுமியின் வாசஸ்தலம்.

களில் கண்ட அக்கிரமங்களைவிட அதிக மோசமான அக்கிரமங்கள் நடந்து வருவதாக அறிந்தேன். ஒரு குறிப்பிட்ட வகுப்பார் இவைகளைச் செய்து வருவதால் நான் அதைப்பற்றி பேசக் கூடாதோ? அப்படி பேசாமல் இருந்தால் என்னுடைய சமாதான நோக்கம் நிறைவேற மாட்டாது.

பீஹாரில் இப்பொழுதுள்ள மந்திரி சபையிடம் நம்பிக்கை இல்லை என்று விண்ணப்பத்தில் கையெழுத்திட்டவர்கள் கூறுகிறார்கள். இந்த மாதிரி தான் நவகாளியிலுள்ள ஹிந்துக்களும் வங்காள பிரதம மந்திரியிடம் நம்பிக்கை இல்லையென்று கூறினார்கள். வங்காள பிரதம மந்திரி தனித்தொகுதிமூலம் அந்தப் பதவியை அடைந்திருப்பதால் அவருடைய ஜாதியாருக்கு அவரிடம் நம்பிக்கை உள்ள வரை அவரை யாரும் நீக்கிவிட முடியாது என்று கூறினேன். அதுபோலவே இங்குள்ள மந்திரிகள் ஹிந்துக்களுடைய ஓட்டைப்பெற்று அந்த ஸ்தானத்தை அடைந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை முஸ்லிம்களாகிய நீங்கள் எப்படி வேலையைவிட்டு நீக்க முடியும்? இந்தமாதிரியான கஷ்ட நிலைமை ஏற்பட்டதற்கு காரணம் தனித்தொகுதி தேறுதல் முறைதான். அதை நான் எப்போதும் கண்டித்து வந்திருக்கிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். இதையேதான் எல்லைப்புற மகாணத்தின் பிரதம மந்திரி டாக்டர் கான் சாகிபும் கூறினார். பட்டானியர்களுக்கு என்னிடத்தில் நம்பிக்கை உள்ளவரை நான் மந்திரி பதவியை ராஜிநாமாச் செய்ய வேண்டிய அவசியமில்லையென்று சொன்னார். அதுவுந்தவிர இந்த மந்திரி சபை போய்விட்டால் என்ன விசேஷ நன்மை ஏற்பட்டுவிடும்? மறுபடியும் அதிகார வர்க்கத்தின் ஆட்சிதான் வந்து சேரும். இந்த மந்திரிகள் என்னுடைய நண்பர்களாக இருப்பதால் நல்ல விதமாக நடக்கும்படியாக அவர்களை நான் செய்ய முடியும்.

போலீஸ் ஸ்டேஷன்களில் உள்ள போலீஸ்காரர்களில் பாதிபேர் முஸ்லிம்களாக இருக்க வேண்டுமென்றும் இந்த விண்ணப்பத்தில் கூறப்பட்டிருக்கிறது. இதே மாதிரிதான் நவகாளி ஹிந்துக்களும் கூறினார்கள். இந்தக் கோரிக்கை சமாதான நோக்கத்திற்கு முற்றிலும் முரணானது. இந்தவிதமாகச் செய்தால் பீஹாரில் அநேக சிறு பாகிஸ்தான்கள் ஏற்படுத்தியதாக ஆகிவிடும். ஆனால் நாம் எங்கிருந்தாலும் பக்கத்தில் உள்ளவர்களுடன் நட்பு உறவுடனேயே வாழ வேண்டியவர்களாவோம். காய்தே ஆஜாம் கூட பாகிஸ்தானில் பெரும்பான்மை கக்ஷிதான் சிறுபான்மை கக்ஷியாருடைய நம்பிக்கையை பெறும் மாதிரியில் நடந்துகொள்ள வேண்டுமென்று ஒரு சமயம் கூறினார். அதே மாதிரி ஹிந்துக்களும் உங்களுடைய நம்பிக்கையைப்பெற வெண்டுமென்று வற்புறுத்தி வருகிறேன். பாகிஸ்தான் ஏற்பட்டாலும் சரி, ஹிந்துஸ்தான் ஏற்பட்டாலும் சரி எதுவானாலும் நியாயத்தை அனுசரித்ததாகவே இருக்க வேண்டும்.

முஸ்லிம்கள் தனியாக ஒன்று சேர்ந்து சில பகுதிகளில் வசிப்பதற்கு அனுமதி தர வேண்டுமென்றும் இந்த விண்ணப்பம் கூறுகிறது. அந்த மாதிரி சில குறிப்பிட்ட இடங்களிலேயே உங்களை வைத்திருக்கும்படி நீங்கள் சர்க்காரைக் கட்டாயப்படுத்த முடியாது. இதே மாதிரி நவகாளியிலுள்ள ஹிந்துக்களுக்காக வங்காளப் பிரதம மந்திரியிடம் நான் சொல்ல முடியுமா? இந் எண்ணத்தை நான் நவகாளியில் ஆதரிக்கவில்லை. தபயமாய் இருந்தால் நஷ்டஈடு கிடைத்தால் இஷ்டப்பட்ட இடத்திற்கு போகலாம் என்று நான் நவகாளி ஹிந்துக்களிடம் கூறினேன். சொத்துக்களை எடுத்துக் கொண்டு சர்க்கார் ஏன் நஷ்டஈடு கொடுக்கக் கூடாது? அதுபோல் தகுந்த நஷ்டஈடு கிடைக்குமானால் நீங்களும் இஷ்டப்பட்ட இடத்திற்கு போகலாம். ஆனால் அந்தக் காரியம் என்னுடைய மனதிற்கு கொஞ்சமும் பிடியாதது என்று கூறுவேன். இந்த மாதிரி சொந்த வீட்டை விட்டு வேறு இடத்தில் குடியேறுவது கோழைத்தனத்தைத் தவிர வேறு ஒன்றுமில்லை. சர்க்கார் நஷ்டஈடு கொடுக்க தயாராக இல்லாவிட்டால் அது அவர்களுக்கு கேவலமாகும். அவர்கள் அப்படிச் செய்யமாட்டார்கள். ஹிந்துக்களுடைய ஓட்டுக்களால் மந்திரி பதவி பெற்றவர்கள் ஹிந்துக்கள் எங்கள் சொல் கேட்கமாட்டார்கள் என்று கூறுவார்களேயானால் அவர்கள் மந்திரி பதவியில் இருப்பதைவிட நெருப்பில் குதித்து மாண்டு மடிவதே நல்லதாகும். சர்க்கார் நியாயமாகவே நடந்து வருகிறார்கள். அனியாயமாக நடந்தால் அழிந்து போவார்கள்"

அகதிகள் முகாமில் காந்தியடிகள் இவ்விதமாக பேசிக் கொண்டிருந்த பொழுது மகன்ஸ் பகவத் தாஸ் என்னும் சட்டசபை மெம்பரும் அவருடன் இருந்தார். கலக காலத்தில் முஸ்லிம்களுக்கு கேடு செய்யுமாறு ஹிந்துக்களைத் தூண்டி விட்டார் என்று முஸ்லிம்கள் அவர் மீது குற்றஞ்சாட்டினார்கள். அவர் உடனே எழுந்திருந்து கூறியதாவது:—
"மகாத்மாஜி! எந்தவிதமாக விசாரணை செய்தாலும் நான் தயாராக இருக்கிறேன். கலக காலத்தில் நான் நடந்துகொண்ட விதத்தைப் பற்றி முடிவு செய்வதற்காக முஸ்லிம்களே விசாரணைக் கமிட்டி ஏற்படுத்த வேண்டுமென்று நான் விரும்புகின்றேன். என் மீது குற்றம்சாட்டுகிறவர்களிடத்தில் நான் பரிபூரண நம்பிக்கை உடையேன். அவர்கள் விசாரித்து முடிவு செய்யட்டும்."

இவ்விதமாக அவர் கூறியது காந்தியடிகளுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது.

அப்துல் பாரியின் மரணம்

பீஹாரில் காந்தியடிகள் பல கிராமங்களுக்கு போய் வருகிறார். அப்படி போகும்பொழுதெல்லாம் அவருடன் பீஹார் மாகாண காங்கிரஸ் கமிட்டித் தலைவரும் பெரிய தொழிலாளர் தலைவருமான ஆசிரியர் அப்துல் பாரியும் அவருடன் போய் வந்தார். ஆயினும் அவரை மார்ச்சு மாதம் 28-ம் தேதி இரவு திடீரென்று சிலர் அவருடைய காரை நிறுத்தி சுட்டுக் கொன்று விட்டார்கள்.

காந்தியடிகள் வழக்கம் போல் 29-ம் தேதி காலை பிரார்த்தனையை முடித்துக்கொண்டு தாம் தங்கியிருந்த டாக்டர் சையத் முகமதின் வீட்டின் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தார். அப்பொழுது சட்ட சபை மெம்பர் பண்டிட் திவாரி அவரிடம் சென்று இந்த மரண விஷயத்தைக் கூறினார். அதைக் கேட்டதும் காந்தியடிகள் அப்படியே அசைவற்று நின்று விட்டார். வானத்தை நோக்கினார், தலை குனிந்துகொண்டு சிறிது நேரம் நின்றார். அதிக துக்கம் ஏற்பட்டதாக காணப்பட்டார். ஒன்றும் பேசாமல் தம்முடைய அறைக்குச் சென்றார்.

அதன்பின் பங்கிப்பூர் மைதானத்திற்கு ஆசிரியர் பாரியின் உடல் கொண்டுவரப் பட்டதும் காந்தியடிகள் பாதுஷாகான், மிருதுலா ஸாராபாய் முதலியவர்களுடன் அங்கே சென்றார். சவப் பெட்டியைப் பார்த்ததும் அவருடைய கண்களில் கண்ணீர் நிறைந்துவிட்டது. அந்த இடத்தில் பத்துநிமிஷ நேரம் இருந்துவிட்டு தம்முடைய ஜாகைக்குச் சென்றார்.

சங்கரன் காசியில் அங்கென்ன சொன்னார்? சண்டாள பக்தனும் தன் குருவென்றார். —நாமக்கல் கவிஞர்

தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

ஏப்ரல் 6, ஞாயிறு 1947

குருட்டுத்தனத்தை விலை கொடுத்து வாங்குவதா ?

வனஸ்பதி நெய்யின் தீமைகளைப் பற்றி ஏற்கனவே எழுதியிருக்கிறேன். பம்பாயிலுள்ள ஹாப்கீன் ஆராய்ச்சிசாலையின் அத்யட்சகரான ஸர். எஸ். எஸ் சோக்கே என்பவர் கூறுகிறார் :—

"எங்கள் ஆராய்ச்சிசாலையில் வனஸ்பதி நெய்யில் போஷணைச் சத்தைப் பற்றிச் செய்த சோதனைகள் காட்டும் உண்மைகள் இவை :—

(1) வனஸ்பதி உண்டால் வளர்ச்சி குன்றுகிறது.

(2) வனஸ்பதி உண்டால் உடம்பு "கால்ஸியம்" என்னும் சுண்ணாம்புச் சத்தைக் கிரஹிக்க முடிவதில்லை.

(3) வனஸ்பதியை உண்டால் உடம்பில் கொழுப்புச் சத்து குறைந்து விடுகிறது."

சமீபத்தில் நடந்த ராஜாங்க சபைக் கூட்டத்தில் உணவு மந்திரியான டாக்டர் ராஜேந்திர பிரசாத் வனஸ்பதி உண்டால் தேகாரோக்கியம் கெட்டுப் போவதாகவும் கண் பார்வை பாதிக்கப்படுவதாகவும் இஜ்ஜட்நகரிலுள்ள ஆராய்ச்சிசாலை கூறுவதாகச் சொன்னார்.

எலிகளை வைத்துச் செய்த ஆராய்ச்சிகள் அவற்றின் மூன்றாவது தலைமுறையிலுள்ள எலிகள் கூட வனஸ்பதி உபயோகத்தால் குருடாய் விடுவதாக நிரூபிக்கின்றன.

இந்த விதமாக ஆராய்ச்சி கூறுவதால் ஜனங்களுடைய க்ஷேமத்தையே தங்கள் லட்சியமாக கொண்ட எந்த சர்க்காரும் வனஸ்பதி உற்பத்தியை தடுத்து அதை உற்பத்தி செய்யும் முதலாளிகளை சமூக விரோதிகளாகப் பாவித்துச் சிறையில் போட்டு விடுவார்கள் என்று எண்ணினால் தவறாகாது. ஆனால் நாம் காண்பது என்ன? நமது சர்க்கார் நம்முடைய கொலையாளிகளைத் தண்டிக்கவில்லை என்பது மட்டுமன்று, மார்போடு அணைத்துக் கொள்ளவும் செய்கின்றனர்.

வனஸ்பதி நெய்யா அல்லது உண்மையான நெய்யா என்று ஜனங்கள் தெரிந்து கொள்வதற்காக வனஸ்பதியுடன் நிலக்கடலை எண்ணெய் 5 சதவிகிதம் சேர்த்து ஏதேனும் ஒரு நிறவஸ்துவைச் சேர்க்கும்படி சர்க்கார் சட்டம் செய்யப் போவதாக அறிகிறோம்.

ஆனால் இப்படிச் செய்வதால் எவ்வித நன்மையும் உண்டாக மாட்டாது என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். வனஸ்பதியை நிலக் கடலை எண்ணெயைக் கொண்டோ அல்லது பருத்தி எண்ணெய்யைக் கொண்டோ தான் செய்கிறார்கள். இந்த எண்ணெய்களைச் சிறு அளவில் சேர்ப்பதால் கண்டு பிடித்துவிட முடியாது. எள் எண்ணெய்யை 10 சதவிகிதம் சேர்த்தால் தான் எண்ணிய நோக்கம் நிறைவேறும் என்று விஞ்ஞானிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். அத்துடன் நிறம் தரும் வஸ்துவைச் சொற்பச் செலவில் நீக்கிவிடவும் செய்யலாம். வனஸ்பதி வேண்டாம் என்று கூறாமல் இப்படி என் மூக்கை வளைத்துத் தொட வேண்டும் என்று விளங்கவில்லை.

வனஸ்பதியை உற்பத்தி செய்வோர் அதற்காக ஏராளமான பணத்தைச் செலவு செய்கிறார்களே அதனால் தேச மக்களுக்கு அணுவளவு கூட நன்மை கிடையாது. தேசத்தில் எவ்வளவு கொழுப்புச் சத்து காணப்படுகிறதோ அந்த அளவில் சிறிதேனும் கூட்டி விடுகிறார்களோ அது இல்லை. இதற்குப் பதிலாக எளிதில் ஜீரணமாய் இரத்தம் ஆகாத ஒரு வஸ்துவை உண்டாக்கி இரத்தமாகக் கூடிய கொழுப்புச் சத்தை வீணாக்கி நஷ்டப்படுத்தவே செய்கிறார்கள். சொற்ப விலையில் உற்பத்தி செய்யப்படும் எண்ணெய்களை வாங்கி இயற்கை அமைத்துள்ள போஷணைச் சத்துக்களை நாசம் செய்துவிட்டு அதன் காரணமாக பல நோய்களை உண்டாக்குகின்றார்கள். இந்தமாதிரி அவர்கள் செய்யும் தீமைக்காக இந்திய மக்கள் ஏராளமான பணத்தையும் மனித சக்தியையும் காலத்தையும் பாழாக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். இந்தப் பிரச்னையைக் குறித்து சாதக பாதகங்களைச் சிந்திக்கும் பொழுது நாம் நம் மூளையை விற்று விட்டோமா என்று எண்ண வேண்டியவர்களாக இருந்து வருகிறோம்.

இந்த நெய் உற்பத்தியால் மாட்டு நெய் உற்பத்தி குறைந்து விடுகிறது. நம்முடைய நாட்டு மக்கள் பெரும்பாலும் சாக பட்சணிகளே யாதலால் மாட்டு நெய் உபயோகம் எவ்வளவு குறைந்தாலும் ஆரோக்கியம் கெட்டேபோகும். மேனாட்டினர் "மார்கரைன்" என்னும் தாவர நெய்யை உபயோகிக்க வில்லையா என்ற கேள்வி இந்த நாட்டுக்குப் பொருந்தாது. மார்கரைனை ரொட்டியில் தடவும் வெண்ணெய்க்குப் பதிலாகவே உபயோகிக்கிறார்கள். அத்துடன் எண்ணெய்யில் உள்ள "ஹைடரோஜன்" என்னும் வஸ்துவை அதிகரிப்பதாலேயே அது கட்டியாக ஆகிறது. அப்படி இறுகும்படி செய்வதற்காக நம் நாட்டில் போல் குளிர் நாட்டில் அதிக அளவு "ஹைடிரோஜனை,"ச் சேர்க்க வேண்டியதில்லை. அதனால் அங்கே மார்கரைனை ஜீரணிக்க அதிகக் கஷ்டம் உண்டாவதில்லை. ஆனால் இந்தியா உஷ்ண தேசம். இறுகுவதற்காக அதிக ஹைட்ரோஜன் சேர்க்க வேண்டும். அதனால் ஜீர்ணமாவது கஷ்டமாகி விடுகிறது. இது மட்டுமன்று, ஐரோப்பியர்கள் மாம்ச பட்சணிகளாயிருப்பதால் அவர்கள் மிருகக் கொழுப்பை சமையலுக்கு உபயோகிக்கிறார்கள், அதனால் அவர்களுக்கு மிருகக் கொழுப்பு ஆரோக்கியத்திற்கு வேண்டிய அளவு கிடைத்து விடுகிறது. மார்கரைன் உபயோகத்தால் அதிகத் தீமை உண்டாவதில்லை. ஆனால் இந்தியாவிலுள்ளவர்க்கு வேண்டிய மிருகக் கொழுப்பு மாட்டு நெய் மூலமாகத் தான் கிடைக்கவேண்டியிருக்கிறது. அதனால் மேனாட்டாரோடு ஒப்பிடுவது சுத்தத் தவறு.

இந்தியாவின் பொருளாதாரத்தின் ஆதாரம் பசுவேயாகும். நமக்குப் பசு ஏர் உழுவதற்கும் வண்டி இழுப்பதற்கும் பால் தருவதற்கும் தேவையாக இருக்கிறது. ஆதலால் பசு சம்ரட்சணத்தைப் பாதிக்கக் கூடிய எந்தக் காரியமும் நம்முடைய நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலையும் படியே செய்யும். இந்த விஷயத்தைச் சரியாக உணர்ந்து கொண்டால் வனஸ்பதி உற்பத்தியைப் பசுக் கொலைக்குச் சமானமாகவே எண்ணும் ஹிந்துக்களேனும் இதை உணர்ந்து தேச நன்மையை சிறிதும் கவனிக்காமல் சுய நலப் பேராசையின் காரணமாகவே செய்யப்படும் வனஸ்பதி உற்பத்தியைச் செய்யாமலிருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வனஸ்பதியை உற்பத்தி செய்வோர் தாவர எண்ணெய்களின் விலையை அதிகரிக்கும்படி செய்து விடுகிறார்கள். சாதாரணஜனங்கள் தங்களுக்குவேண்டிய கொழுப்புச் சத்தைத் தாவர எண்ணெய்களிலிருந்தே

பெறுகிறார்கள். அதனால் இப்பொழுது தாவர எண்ணெய்களின் விலை ஏற்றத்தால் அவர்கள் தங்களுக்கு வேண்டிய கொழுப்புச் சத்தை பெற முடியாமல் இருக்கிறார்கள். பண முடையவர்கள் தங்களுக்குத் தீங்கு செய்யும் வனஸ்பதியை அதிக விலை கொடுத்து வாங்கி உண்டு அதை சீரணமும் செய்ய முடியாமல் தங்களுக்கு வேண்டிய கொழுப்புச் சத்தைப் பெற முடியாமல் போகிறார்கள். இந்தப் பணக்காரர்கள் வனஸ்பதி உற்பத்தியை ஆதரிக்க விரும்பினால் அந்த வனஸ்பதி டப்பாக்களை வாங்கி தங்கள் உடம்பில் செலுத்துவதை விடச் சாக்கடையில் கொட்டுவதே நல்லதாகும். சர்க்கார் கண்ட்ரோல் விலை ஏற்படுத்திய போதிலும் பெரிய முதலாளிகள் வியாபாரம் செய்வதால் விலை ஏறியே இருக்கின்றது. அத்துடன் கள்ள மார்க்கட் வியாபாரமும் நடக்கிறது.

வனஸ்பதி உற்பத்தி 1941-ம் வருஷத்தில் 8? ஆயிரம் டன் என்றும் அது 1950-ம் வருஷத்தில் 400 ஆயிரமாக அதிகப்பட வேண்டும் என்றும் "ஆலோசனைத் திட்டக் கமிட்டியார்" சிபார்சு செய்திருக்கிறார்கள். அதைப் பார்க்க ஆச்சரியமாயிருக்கிறது. நாம் கைத்தொழில்களைப் பெருக்க விரும்புவது ஒரு சிலர்க்கு பெரும் பணம் சேரும்படி செய்வதற்காகவா? அல்லது சகல மக்களுக்கும் தேவையான நல்ல வஸ்துக்களை உற்பத்தி செய்து கொடுப்பதற்காகவா? இது விஷயத்தில் தர்மநியாயம் பார்ப்பதற்கு ஒன்றுமே கிடையாதா? நம்முடைய தொழில் கொள்கையில் மனிதப் பண்புக்கு இடம் கிடையாததா? கிடையாதென்றால் நாம் மிருகங்களே ஆகிக் கொண்டிருக்கிறோம் என்று சொல்ல வேண்டியதுதான். உடனே இந்த வனஸ்பதி உற்பத்தியைக் கால தாமதமின்றி நிறுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

ஜே. ஸி. குமரப்பா

உண்மையான பச்சாத்தாபம் தேவை

மகாத்மா காந்தியடிகள் மார்ச்சு மாதம் 28-ந் தேதி ஜகன்னப்பாத்தில் தங்கியிருந்த பொழுது அனேக முஸ்லீம்லீக் தலைவர்கள் வந்து பேசிக் கொண்டிருந்தார்கள். மாலை நடந்த கூட்டத்தில் அவர் கூறியதாவது:—

"நான் பல கிராமங்களுக்குப் போயிருந்தேன். முஸ்லிம்களுக்கு நம்பிக்கை உண்டுபண்ணக் கூடிய அளவு ஹிந்துக்களுடைய பச்சாத்தாபம் அவ்வளவு உண்மையானதாக இல்லை. இதைக் காண எனக்கு வருத்தமாய் இருக்கிறது. இன்று நண்பகல் நடந்த கூட்டத்தில் ஹிந்துக்கள் முஸ்லிம்களைப் பாதுகாப்பதாக பஹிரங்கமாக உறுதி கூற வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். ஆனால் அந்த விதமாக உறுதி கூற ஒரு முஸ்லிம்கூட எழுந்திருக்கவில்லை. அது எனக்கு வருத்தமாய் இருக்கிறது. ஆதலால் முஸ்லிம்களைப் பார்த்து நீங்கள் உங்கள் மனத்தை சுத்தம் செய்து கொள்வீர்களா என்று கேட்க எனக்கு தைரியம் வரவில்லை. பீஹாரில் கஷ்டங்களை அநுபவித்த மக்கள் அவர்கள்தான். அக்கிரமங்கள் செய்த ஹிந்துக்கள் பச்சாதாபப்படாமல் அவர்களிடம் அந்தக் கேள்வியை எப்படி கேட்க முடியும்?

மதுரசிங் போன்ற அக்கிரமத் தலைவர்கள் இன்னும் பிடி படாமல் இருந்து கொண்டிருக்கின்றார்கள். அதனால் முஸ்லிம்கள் தங்களுடைய கிராமங்களுக்கு திரும்பி வர பயப்படுகிறார்கள். அதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ஹிந்துக்கள் அவர்களை மறைத்து வைத்திருக்கிறார்கள் என்றே நான் எண்ண வேண்டி இருக்கிறது. அப்படி இல்லையானால் அவர்கள் இதற்குள் பிடிபட்டிருப்பார்கள் அல்லவா? மதுரசிங்கின் நண்பர்களும் அநுதாபிகளும் அவரிடம் பகிரங்கமாக வெளியே வந்து தண்டனையை ஏற்றுக்கொள்ளும்படி யோசனை கூறும்படி நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மகந்து பகவத்தாஸும் கலகத்தில் முக்கியஸ்தராக இருந்ததாக கூறுகிறார்கள். இப்படி அவரைச் சந்தேகிப்பதால் அவர் சட்ட சபை மெம்பர் ஸ்தானத்தை விட்டு விடவேண்டுமென்று அவரிடம் நான் யோசனை சொன்னேன். அவர் ஒரு நிமிஷங் கூடத் தயங்காமல் உடனே செய்வதாக வாக்குறுதி அளித்தார். அத்துடன் தாம் நேரடியாகவோ மறைமுகமாகவோ அக்கிரமங்களில் கலந்து கொள்ளவில்லை என்பதாகவும் முஸ்லிம் லீக் பகிரங்கமாக பாரபக்ஷமற்ற விசாரணை நடத்தினால் அதற்கு தயாராக இருப்பதாவும் கூறினார்.

நான் இந்த ஊருக்கு வரும்பொழுது என்னுடன் சர்க்கார் லாரி ஒன்று வந்தது. சாலையில் போகிறவர்கள் அதில் பலவந்தமாக ஏறிக்கொண்டதாக அறிகிறேன். சட்டத்தை மீறி இப்படி நடந்து கொண்டது ஆண்மைக்கு அழகல்ல. உலகத்தில் எந்த சுதந்திர தேசத்திலும் இந்த மாதிரியான காரியங்களை அநுமதிக்க முடியாது. இந்த மாதிரி சட்டங்களை மீறுகிறவர்கள் சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னதாகவே அதை குழி தோண்டிப் புதைப்பவர்கள் ஆவார்கள்."

கதர் கிராமக் கைத்தொழில் கண்காட்சி

தேசீய வாரம் வரப்போகிறது. காங்கிரஸ் சபை இப்போது நிர்மாண வேலையில் முழு மூச்சாக முனைந்து நிற்க அலகபாத்தில் தீர்மானம் செய்திருக்கிறது. ஆதலால் நம்முடைய கண்காட்சிகளை எப்படி ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதை அறிவது நல்லதாகும்.

1. நோக்கம்:—

கதர் கிராமக் கைத்தொழில்கள் ஆகியவற்றின் லட்சியங்களைக் கிராமங்களிலுள்ள பாமர ஏழை மக்களுக்குக் காட்டுவதற்கு கண்காட்சி ஏற்படுத்துவது ஒரு பயனுள்ள சாதனமாகும். கிராம இயக்கம் என்றால் என்ன, அதன் நோக்கத்தை எப்படி அடைவது என்பதை அதன் மூலம் அவர்கட்கு விளக்கலாம். ஆதலால் கிராமத்திலுள்ள ஜனங்களுக்கு அறிவு ஊட்டும் நோக்கத்துடனேயே அத்தகைய கண்காட்சிகளை அமைக்க வேண்டும். கிராம இயக்கம் வெற்றி பெறுவதும் அவர்களுடைய ஒத்துழைப்பையே பொறுத்ததாகும். கண்காட்சிகளை ஜனங்களிடமிருந்து பணத்தைப் பிடுங்குவதற்காக ஏற்படுத்தக் கூடாது.

2 கட்டணம்:—

கண்காட்சி பார்க்கிறவர்களிடம் மிகவும் சொற்பமான தொகையே வசூல் செய்ய வேண்டும்.

3. அலங்காரம்:—

இதற்காக அதிகப் பணம் செலவு செய்ய வேண்டிய அவசியமில்லை. அலங்காரம் ஆடம்பரமில்லாததாக இருக்க வேண்டும். கிராமங்களின் கலைக்குத் தக்கவாறு ஏற்படுத்த வேண்டும். கிராமங்களில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டே அலங்காரம் செய்ய வேண்டும்.

4. ஸ்டால்கள்:—

இவைகளைப் பெரும்பாலும் விஷயங்களை விளக்குவதற்காகவே ஏற்படுத்த வேண்டும். வெறும் விற்பனைக்காக ஏற்படுத்தக் கூடாது.

5. விஷய விளக்கம்:—

ஒவ்வொரு கைத் தொழிலையும் மூலப் பொருள் முதல் கைத் தொழில் செய்து முடிக்கும் வரையுள்ள சகல முறைகளையும் விளக்கிக் காட்ட வேண்டும்.

கஞ்சி குடிப்பதற்கிலார், அதன் காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார். —பாரதியார்.

6. விற்பனைக் கடைகள்

கண் காட்சியில் செய்யப்படும் பொருள்களை விற்க அனுமதி தரலாம். கண் காட்சியில் காண்பிக்கப்படும் கைத் தொழில் சம்பந்தமாகவுள்ள நூல்களும் துண்டுப் பிரசுரங்களும் விற்கப்படலாம்.

7. பலகாரக் கடைகள்

கிராமத்திலுள்ள ஜனங்களுக்கு உணவு சீர்திருத்தம், போஷணை முதலிய விஷயங்களைக் குறித்து அறிவு புகட்டுவது அவசியம். ஆதலால் கண் காட்சியில் வைக்கப்படும் பலகாரக் கடைகள் பார்க்க வருகிறவர்களுடைய சௌகரியத்துக்காக ஏற்படுத்தப்படாமல் அறிவு புகட்டுவதற்காகவே ஏற்படுத்தப் பட வேண்டும். ஆதலால் கண் காட்சியாளர்களேதான் அவைகளை நடத்த வேண்டும். அவற்றில் பசும்பால், மோர், வெண்ணெய் எடுத்த பால், தயிர் முதலியன கிராமவாசிகளுக்கு அடக்க விலைக்கு விற்க வேண்டும். ஆடம்பரமான பலகாரங்கள் செய்யப்படக் கூடாது. மிஷினில் செய்த சர்க்கரை, வனஸ்பதி போன்ற தாவர நெய், மிஷினில் செய்த எண்ணெய். மிஷினில் அறைத்த மாவு, மிஷினில் குற்றிய அரிசி முதலிய தான்யங்கள் முதலியவைகளை உபயோகிக்கக்கூடாது.

8. விஷய விளக்கங்களுக்கு ஏற்பாடு செய்தல்

சில கைத்தொழில்கள் அந்தப் பிரதேசத்தைச் சேராதவைகளாக இருக்கலாம். அப்படிப்பட்ட தொழில்களைச் செய்துகாட்ட அவ்விடங்களிலிருந்து அதற்கு வேண்டியவர்களை கொண்டுவர வேண்டும். அதற்காக கண் காட்சி மைதானத்திலேயே சமையல் அறை அமைப்பது அவசியமாகும். இந்தச் சமையல் அறையை கண் காட்சியார் திறமையாக நடத்தி உணவு போஷணை பிரசாரத்துக்காக உபயோகிக்க வேண்டும். இங்கும் மிஷின் பொருள்களை உபயோகிக்கக்கூடாது. பசும் பாலும் நெய்யும் தான் தரவேண்டும். உள்ளூர் ஊழியர்களும் அதற்குத் தக்கவாறு நடந்து கொள்ள வேண்டும்.

9. சாமான்கள் வாங்குதல் :

கண்காக்ஷிக்காக வாங்கும் பொருள்களெல்லாம் கிராமங்களில் செய்யும் பொருள்களாகவே இருக்க வேண்டும் என்று சொல்லத் தேவையில்லை. சாமான்களை வாங்கும் உத்தியோகஸ்தர் மலிவான சாமான்களை வாங்கும் மனப்பான்மை உடையவராக இருக்கக்கூடாது. அவருடைய நோக்க மெல்லாம் கதருக்கும், கிராமக் கைத்தொழில்களுக்கும் ஆதரவு அளிப்பதாகவே இருக்க வேண்டும். அத்தகைய பொருள்கள் கிடைக்காவிட்டால் அவைகளை உற்பத்தி செய்யும் கைத்தொழில்களை முதன்முதலாக கண்காக்ஷியிலேயே ஆரம்பித்து வைக்க வேண்டும். உதாரணமாக தீட்டாத அரிசி கிடைக்காவிட்டால் கையால் நெல் குத்துவதை கண்காக்ஷியில் ஏற்படுத்த வேண்டும். முன்கூட்டியே ஏற்படுத்திவிட்டால் கண்காக்ஷிக்கு வேண்டிய அரிசி முழுவதையும் பெற்றுவிட முடியும். அப்படிச் செய்யாவிட்டால் கண்காக்ஷியில் கைக்குத்தல் செய்ய வேண்டிய முறையைக் காட்டும்பொழுது அதே சமயத்தில் அங்குள்ள போஜனசாலையில் மில் அரிசி உண்ண வேண்டி இருக்கும். அது கண்காக்ஷியின் நோக்கத்தை அடியோடு அழித்துவிடும்.

10. எப்பொழுது கண்காக்ஷியை ஏற்படுத்துவது :

இந்த விஷயம் வெகு முக்கியமானது. அதனால் கண்காக்ஷி ஏற்படுத்த போதுமான காலம் இல்லாமல் இருக்குமானால் அவசரப்பட்டு ஏற்பாடு செய்யக் கூடாது. முன்கூட்டி திட்டம் வகுத்துக்கொண்டு அதற்கு வேண்டிய பொருள்களை, கருவிகள், ஆயுதங்கள், சாதனங்கள், முதலியவைகளை முன்கூட்டி சேகரஞ் செய்ய வேண்டும். கைத்தொழில்கள் நன்றாக நடைபெற ஆரம்பித்த பிற்பாடுகூட கண்காக்ஷியை ஜனங்கள் வந்து பார்ப்பதற்காக திறந்து வைக்கலாம்.

11. கட்டடங்கள் :

பெரிய கட்டடங்களுக்கு அவசியமே இல்லை. சாமான்கள் வைக்கும் அறையும் சமையல் அறையும் சாப்பாட்டு அறையும் மட்டும் மழை வந்தால் ஒழுகாமல் இருக்க வேண்டும். கைத்தொழில்கள் நடக்கும் இடங்கள் கூரைக் கட்டடங்களாய் இருக்க வேண்டும். சுவர்களுக்கு பதிலாக நல்ல பாய்களை கட்டிவைத்தால் போதும். இந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு கிராமங்களில் கிடைக்கும் பொருள்களையே உபயோகிக்க வேண்டும். துத்தநாகத் தகடுகள் கண் காட்சியின் அழகைக் கெடுத்துவிடும். அவைகள் நம்முடைய லக்ஷியங்களுக்கு ஒத்தவைகளும் அல்ல.

12. விளக்குப் போடுதல்

தாவர எண்ணெய்களைக் கொண்டே விளக்கேற்ற வேண்டும். மண்ணெண்ணெய் கண்காட்சிக்குள் வரவே கூடாது.

13. சுகாதாரம் :

தினந்தோறும் கண்காட்சியைப் பெருக்கி சுத்தஞ் செய்ய வேண்டும். நல்ல கக்கூசுகளும் மூத்திரப் புரைகளும் ஏற்பாடு செய்ய வேண்டும். கண்காட்சியைப் பார்க்க வருகிறவர்கள் அவைகளைப் போல் தங்கள் வீடுகளிலும் அமைக்க வேண்டு மென்று விரும்பத் தக்கனவாக இருக்க வேண்டும். இந்த மாதிரியான கண்காக்ஷிகளில் பம்பாய்க் கக்கூஸ் என்னும் நீர்க்கக்கூசுகளுக்கு இடந்தரலாகாது. இடம் விட்டு இடம் பெயர்த்துவைக்கும் கக்கூசுகளும் குழிக் கக்கூசுகளும் வாளிவைக்கும் கக்கூசுகளுமே அமைக்கப்பட வேண்டும். அவைகளை சரியாக உபயோகிக்கும் விதத்தைக் காட்டுவதற்காகத் தொண்டர்கள் நியமிக்கப்பட வேண்டும். கண்காக்ஷியை பார்க்கிறவர்களிடம் அத்தகைய கக்கூசுகளின் உபயோகத்தையும் அவற்றைக் கொண்டு உரம் தயாரிக்கும் முறையையும் விளக்கிச் சொல்ல வேண்டும்.

14. விளம்பரங்கள் :—

கண் காக்ஷி பார்க்க வருகிறவர்களுக்கு நன்றாக விளங்கும்படி கைத்தொழில்களை விபரமாக விளக்கிச் சொல்ல வேண்டும். இதற்காக சுதேச பாஷைகளில் சுவரொட்டிகளும், புள்ளி விபரங்கள் அடங்கிய படங்களும் தயாரிக்கப் படவேண்டும். அழகான எழுத்துக்களை விட அழகான படங்களே பாமர மக்களாகிய எழுத்து வாசனை அறியாத கிராம வாசிகளுக்கு அதிகபயன் தருவதாகும்.

15. உடை :—

கண் காக்ஷி உத்தியோகஸ்தர்களும், குமாஸ்தாக்களும், தொண்டர்களும் ஊழியர்களும், கைத்தொழில் நடத்திக் காட்டு கின்றவர்களும் அத்தாக்ஷி பெற்ற சுத்த கதரையே அணியவேண்டும்.

16. கடுதாசி :—

காகிதங்களும், கவர்க்கூடுகளும், பாட்ஜ்களும், டிக்கட்டுகளும், பாஸுகளும், ரிஜிஸ்தர்களும், ரெக்கார்டு புஸ்தகங்களும், துண்டுப் பிரசுரங்களும். சுவரொட்டிகளும், சகலமும் கையால் செய்த காகிதமாகவே இருக்க வேண்டும்.

17. விநோதங்கள் :—

கண் காக்ஷிகளில் ஏற்படுத்தும் விநோதங்கள் வெறும் பொழுதுபோக்கிற்காக மட்டும் இருக்கக் கூடாது. அங்கே நடைபெறும் கிராமியப் பாடல்களும், நடனங்களும், சங்கீதமும் நம்முடைய பகன்

பாட்டையும், கலையையும் காட்டக்கூடிய அளவு உயர்ந்த தினுசாக இருக்க வேண்டும்.

அங்கு நடைபெறும் பிரசங்கங்கள் அரசியல் பிரசாரப் பிரசங்கங்களாக இராமல் ஜனங்களுக்கு விஷயங்களை அறிவிப்பதாகவும், உயர்ந்த உணர்ச்சிகளை ஊட்டுவதாகவும் இருக்க வேண்டும்.

18. *நிர்மாணத் திட்டம் :—*

நிர்மாணத் திட்டத்திலுள்ள இதர விஷயங்களை எல்லாம் அவைகளை நடத்திவரும் ஸ்தாபனங்களின் உதவியைக்கொண்டு நடத்திக்காட்ட வேண்டும்.

ஜே. ஸி. குமரப்பா

இதனால் என்ன பயன்?

காந்தியடிகள் மார்ச்சு மாதம் 25-தேதி நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் கூறியதாவது :

"இன்று நவகாளியிலிருந்து ஒரு நண்பர் வந்து அங்குள்ள நிலைமை சரியாக இல்லை என்று என்னிடம் கூறினார். எதற்கும் அஞ்ச வேண்டாமென்று நான் கூறினேன். நவகாளியிலுள்ள ஹிந்துக்கள் அனைவரும் கொல்லப்பட்டாலும் அவர்களுடைய சொத்துக்களெல்லாம் அழிக்கப்பட்டாலுங் கூட அஞ்ச வேண்டியதில்லை. அதன் காரணமாக ஹிந்து மதம் அழிந்துவிடப் போவதில்லை. இஸ்லாம் மதத்திற்குத்தான் அதிகமான தீமை உண்டாகும். நவகாளியிலுள்ள ஹிந்துக்கள் தங்கள் குறைகளை வங்காளப் பிரதம மந்திரிக்கும் எனக்கும் அடிக்கடி அறிவித்துக் கொண்டு வர வேண்டும்.

தவறு நடந்தால் அதற்கு பரிகாரம் வேண்டும் என்று கேட்பது தவறாகாது. பீஹாரிலுள்ள ஹிந்துக்கள் என் சொற்படி நடப்பார்களானால் நான் இங்கிருந்து கொண்டே நவகாளி ஹிந்துக்களுக்கு உதவி செய்ய முடியும். எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமென்று நவகாளி முஸ்லிம்களுக்கு சொன்னேனோ அதையே பீஹார் ஹிந்துக்களுக்கும் கூறுகின்றேன். எது எப்படி ஆனாலும் கலகத்தில் கஷ்டப்பட்டவர்களெல்லாம் தைரியமாக நடந்துகொள்ள வேண்டும். ஒரு நாளும் கோழைகளாக ஆகிவிடக்கூடாது.

இன்று ஒரு முஸ்லிம் என்னிடம் வந்து முஸ்லிம் ஜனத்தொகை 10 கோடியாய் இருப்பதால் முஸ்லிம் ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கு ஒரு கோடி முஸ்லிம்களை பலிகொடுத்தால் நல்லதுதானே என்று கூறினார் இந்த விதமாக முஸ்லிம்கள் எண்ணினால் அது பெருந்தவறாகும். இந்த யோசனைப்படி நடந்து முஸ்லிம் ராஜியத்தை ஸ்தாபித்தால் முஸ்லிம்கள் யாரை ஆள்வார்கள்? சுத்தக் கோழைகளைத்தானே? அதிலென்ன நன்மையோ பெருமையோ உண்டு? அதே மாதிரி ஹிந்துக்கள் முஸ்லிம்களை அழித்து ஹிந்து ராஜியத்தை ஏற்படுத்த எண்ணினால் அதுவும் அது போல் பயனற்றதே யாகும்."

காந்தியடிகளுடைய பீஹார் விஜயம்

மகாத்மா காந்தியடிகள் பீஹாரில் தங்கி அங்கு சென்ற நவம்பர் மாதத்தில் ஹிந்துக்கள் முஸ்லிம்களுக்கு அக்கிரமங்கள் செய்த கிராமங்களுக்குச் சென்று பார்வை இட்டும் உபதேசம் செய்தும் வந்தார்.

மார்ச்சு மாதம் 27-ந்தேதி எல்லைப்புற காந்தி கான் அப்துல் கபார்கானுடன் அம்துவா என்னும் கிராமத்திற்குச் சென்றிருந்த பொழுது அவரிடம் முஸ்லிம்கள் தங்கள் குறைகளைக் கூறிக்கொண்டார்கள். அப்பொழுது காந்தியடிகள் அவர்களுடைய குறைகளை நீக்க தம்மால் இயன்றதை எல்லாம் செய்வதாகவும் ஒரே ஒரு முஸ்லிம் குழந்தை மட்டும் ஹிந்துக்கள் மத்தியில் சிக்கிக் கொண்டாலும் அதைப் பாதுகாக்க வேண்டியது ஹிந்துக்களுடைய கடமை என்பதாகவும் அந்தக் கடமையைச் செய்யாமல் ஹிந்துக்கள் அந்தக் குழந்தைக்குக் கெடுதல் செய்வார்களானால் அவர்கள் ஹிந்து மதத்தை தீயில் போட்டு எரிப்பவர்களே ஆவார்கள் என்பதாகவும் தம்முடைய நோக்கம் நிறைவேறுவதற்காக தாம் பிராணத் தியாகம் செய்ய தயாராக இருப்பதாகவும் கூறினார்.

அதன்பின் போலாய் என்னும் கிராமத்திற்குச் சென்று கலக காலத்தில் முஸ்லீம்கள் பயந்து போய் அப்படி அப்படியே போட்டுவிட்டுப் போன வீடுகளை போய்ப் பார்வை யிட்டார். அந்தக் காலத்தில் சாம்டு மகதோ என்பவர் ஒருவர் 19 பேர் உயிரைக் காப்பாற்றி இருக்கிறார். அவருடைய வீட்டுக்கும் காந்தியடிகள் விஜயம் செய்தார். எல்லா இடங்களையும் காந்தியடிகளுக்கு முஸ்லிம் லீக் தொண்டர்கள் காட்டினார்கள்.

பீஹாரில் காந்தியடிகள் கிராமங்களுக்கு செல்லும் பொழுது முஸ்லிம் லீக் தொண்டர்கள் தங்கள் கார்களில் லீக் கொடியைப் பறக்கவிட்டுக் கொண்டு அவருக்குப் பின்னால் ஏராளமாகச் சென்றார்கள். ஒரு கிராமம் போய்ச் சேர்ந்ததும் அவர்கள் கீழே இறங்கி காந்தியடிகளைத் தரிசிப்பதற்காக வரும் ஆண் பெண் ஜனக் கூட்டங்கள் அவர் மேல் விழுந்து விடாமல் இருப்பதற்காக அவரைச் சுற்றி கை கோர்த்து நின்று பாதுகாவல் செய்தார்கள்.

ஜெயின்பூர் என்னும் கிராமத்திற்கு காந்தியடிகள் விஜயம்செய்தார். அவர் புறப்பட்டுப் போவதற்கு முன்னால் பத்திரிகை நிருபர்கள் அந்தக் கிராமத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்கள் போகும் வழியில் கிராமவாசிகள் காந்தியடிகளிடம் முஸ்லிம் சகாய நிதிக்கு பணம் கொடுப்பதற்காக சாலையில் நின்று காத்துக்கொண் டிருந்தார்கள். பத்திரிகை நிருபர்களுடைய காரைக் கண்டதும் அதை நிறுத்தி காந்தியடிகள் இருக்கிறாரா என்று பார்த்தார்கள். காந்தியடிகள் பின்னால் வருகிறார் என்று நிருபர்கள் கூறியதை நம்பாமல் பின் ஸீட்டுக்கு அடியில் கூடப் பார்த்தார்கள். அதன்பின் மன்னிப்பு கேட்டுக் கொண்டார்கள்.

காந்தியடிகள் ஒரு கிராமத்திற்குச் சென்றிருந்த பொழுது கலக காலத்தில் கஷ்டப்பட்ட முஸ்லிம் பெண்கள்காந்தியடிகளிடம் வந்து, தங்கள் குறைகளை கூறிக்கொண்டார்கள். அப்பொழுது ஒரு முஸ்லிம் மூதாட்டியார் காந்தியடிகளிடம் வந்து தாங்கள் தானா காந்தியடிகள் என்று கேட்டார் அப்பொழுது காந்தியடிகள் புன்னகை புரிந்து கொண்டு அவரிடம், தங்களுக்கு எப்படி என்னுடைய பெயர் தெரியும் என்று கேட்டார். அதற்கு அந்த அம்மையார், இங்கே ஜனங்கள் தினந்தோறும் காந்திக்கி ஜே என்று கோஷம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதனால் தங்கள் பெயரை அறிந்தேன், தாங்கள் இந்தக் கலகங்களை தயவு செய்து நிறுத்த வேண்டும். இத்தகைய காட்சிகள் இதற்குமுன் இங்கே எந்தக் காலத்திலும் நடந்ததில்லை, என்று கூறினார்.

சில கிராமத்திறகு சென்றிருந்தபொழுது காந்தியடிகளிடம் தங்கள் குறைகளைச் சொல்லி முஸ்லிம் பெண்கள் கண்ணீர் விட்டு அழுதார்கள். அதைக் குறித்து காந்தியடிகள் கூறியதாவது :—

"பெண்கள் இந்தவிதமாக நடந்து கொள்ள வேண்டுமென்று முஸ்லிம் லீக் கூறவில்லை, ஆண்களையும் பெண்களையும் கோழைகளாகும்படி செய்வதால் எவ்வித நன்மையும் உண்டாவதில்லை. இத்தகைய சந்தர்ப்பங்களில் ஆண்களும் பெண்களும் தைரியமாக நடந்து கொள்ளும்படி செய்வதற்காக சகல வித முயற்சிகளும் செய்யப்பட வேண்டும். இந்த விதமாக அழுகிறவர்கள் தங்கள் சிருஷ்டிகர்த்தாவையும் ரக்ஷகரையும் மறந்து விடுகிறார்கள். இந்த உபதேசத்தையே ஹிந்துக்களுக்கும் கூறுகின்றேன்."

இன்ப வாழ்வுக்கு அவசியமான பொருள்கள் மிக மிகச் சொற்பமே. —ஔரேலியர்

காந்தியடிகள் பைத்தியம்

ஒரு சமயம் செட்டி நாட்டில் அமராவதி புதூரில் ஸ்ரீ ராய-சொக்கலிங்கம் அவர்கள் இல்லத்தில் காந்தியடிகள் தங்கியிருந்தார். அப்பொழுது ஒரு கைரேகை பார்க்கும் நிபுணர், "காந்தி அடிகளின் கைரேகையைப் பார்க்கவேண்டும்" என்று வந்தார். அதைக் கேட்ட மகாத்மா, "ரூபாய் ஆயிரம் கொடுத்தால் என் கை ரேகையைப் பார்க்கலாம்" என்று சொன்னார்.

உடனே ரேகை சாஸ்திரி, "ஐயோ நானே பிச்சைக்காரன். என்னிடத்தில் ஒரு பைசாக்கூட இல்லை. ஆனாலும் மகாத்மாவின் கைரேகைகளைப் பார்த்தே தீரவேண்டும் என்கிற பைத்தியம் எனக்குத் தலைக்கேறிவிட்டது. நான் ரேகை பார்க்காமல் இந்த இடத்தை விட்டுப் போகமுடியாது" என்று கூறினார். இதைக் கேட்ட மகாத்மா, "ஆயிரம் ரூபாய் நீர் எனக்குக் கொடுத்தே தீரவேண்டுமென்ற பைத்தியம் என் தலைக்கேறி விட்டது" என்று பதிலளித்து விட்டார்.

இப்பதிலைக் கேட்ட ரேகை சாஸ்திரி, காந்திஜியின் பைத்தியத்திற்கு முன் தமது பைத்தியம் செல்லாது என்று கண்டு மூட்டையை கட்டிக்கொண்டு கிளம்பி விட்டார்.

மகாத்மா காந்தியடிகள் கான் அப்துல்கபார்கானுடன் ஒரு முஸ்லிம் வீட்டிலிருந்து வெளியே வருகிறார்.

காந்தியடிகளின் சத்தியாக்ரப் போர்கள்

இந்தியாவில்

1. விராம்காம் (குஜராத் மாகாணம்) *1914*:— கத்தியவாட் பிரதேசத்துக்குப் போகும் பிரயாணிகளிடம் சுங்கம் வசூலித்துக் கஷ்டப்படுத்தினார்கள். அதை அறிந்ததும் காந்தியடிகள் அதைக் குறித்து வைசிராய்க்குக் கடிதம் எழுதினர். அத்துடன் சத்தியாக்ரகப் போர் ஆரம்பிக்கத் தயாராயிருக்கும்படி ஜனங்களைக் கேட்டுக் கொண்டார். ஜனங்கள் ஆயத்தமாவதைக் கண்டதும் மத்திய சர்க்கார் சுங்கம் வசூலிப்பதை நிறுத்தி விடுவதாகச் சீக்கிரமாகத் தீர்மானம் செய்தார்கள்.

2, சாம்பரான் (பீகார் மாகாணம்) *1917* எப்ரில் :— ஐரோப்பிய நீலிச் தோட்டக்காரர்கள் விவசாயிகளை நீலிச் செடிகளைப் பயிர் செய்யும்படி நிர்ப்பந்தித்ததோடு அசம்பாவிதமான வரிகளையும் வசூலித்து வந்தார்கள். ஜனங்கள் படும் அவதிகளைக் கேட்டதும் காந்தியடிகள் அவைகளை விசாரிப்பதற்காக அங்கே விரைந்து சென்றார். உடனே சர்க்கார் அவர் மோதிஹரி ஜில்லாவை விட்டு வெளியேறிவிட வேண்டுமென்று அவருக்கு *1917* எப்ரில் *17*-ந் தேதி உத்திரவிட்டார்கள். காந்தியடிகள் அந்த உத்தரவை மீறினர். அவரைக் கைது செய்தார்கள். ஆனால் தண்டிக்கவில்லை. சர்க்கார் நீலி விவசாயிகள் விஷயத்தை விசாரணை செய்து ஆறு மாத காலத்துக்குள் அவர்களுடைய குறைகளை நீக்கினர்கள்.

3. பம்பாய் *1917* மே :— "அரசருடைய குடியேற்ற நாடுகள்" என்று அழைக்கப் பெறும் இலங்கை முதலிய நாடுகளுக்கு இந்தியாவின் தொழிலாளர்களைச் சேர்த்தார்கள். ஆனால் தொழிலாளர்கள் அங்கு போய் "முறிச் சீட்டு" எழுதிக் கொடுத்து "அடிமைகள்" போல் வாழ வேண்டியிருந்தது. அதனால் அந்த விதமாக வாழும்படி தொழிலாளர்களை அனுப்புவதை நிறுத்த வேண்டுமென்று சத்யாக்ரம் ஆரம்பிக்கப்பட்டது. அதற்காக பிரதமக் கூட்டம் மே 31-ந் தேதியன்று பம்பாயில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. பெண்கள் பலர் இது சம்பந்தமாக வைசிராயைப் பேட்டி கண்டார்கள். தொழிலாளர்கள் அனுப்பும் கப்பல்களை மறியல் செய்ய வேண்டும் என்று காந்தியடிகள் யோசனை கூறினர். வைசிராய் செம்ஸ் போர்டு சாத்வீகச் சட்ட மறுப்புப் போர் ஏற்பட்டால் அபாயம் என்று உணர்ந்து காந்தியடிகளை அழைத்துப் பேசினார். யுத்தம் முடியும் வரை தொழிலாளர்களை அனுப்புவதில்லை என்று கூறினர். இந்தியாவில் *1920* ஜனவரி முதல் தேதியன்று "முறிச் சீட்டு முறை" அடியோடு நீக்கப்பட்டது.

4. ஆமதாபாத் (குஜராத்) *1918* பெப்ரவரி *25*,— ஆலைத் தொழிலாளர்களுக்கு அதிக கூலி வேண்டும் என்பதற்காக காந்தியடிகள் 22 நாள் வேலை நிறுத்தத்தை நடத்தி வைத்தார். தொழிலாளர்கள் உறுதி குலைவதைக் கண்டதும் காந்தியடிகள் உண்ணாவிரதம் மேற்கொண்டார். மூன்று நாட்களுக்குள் திருப்திகரமான ஒப்பந்தம் ஏற்பட்டது. *1917* ஜூலை மாதம் வாங்கிய கூலி விகிதத்தை அனுசரித்து தொழிலாளர்கள் *36* சதவிகிதம் அதிகக் கூலி பெற்றார்கள்.

5. கெட்டா (குஜராத்) *1918* மார்ச்சு :— மழையில்லாமல் பயிர் விளையவில்லை. அதனால் விவசாயிகள் சட்டப்படி தரக் கூடிய வரி வாங்கா நிவாரணத்தை அளிக்கும்படி கேட்டனர். சர்க்கார் மறுத்தனர். காந்தியடிகள் கிஸ்தியைக் கட்ட வேண்டாம் என்று யோசனை கூறினர். ஜனங்கள் அப்படி செய்து அநேக துன்பங்களை அனுபவித்தார்கள். இறுதியில் சர்க்கார் அவர்கள் கோரிக்கைகளுக்கு இணங்கினர்கள்.

(தொடரும்)

அச்சடித்தவர் பி. அருணாசலம், கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ் 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி. சென்னை,
பிரசுரித்தவர்: சின்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராயநகர், சென்னை 17.
ஆசிரியர் : பொ. திருகூட சுந்தரம் ; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை.